©
தமிழ்நாடு அரசு
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 1.60 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 31] சென்னை, புதன்கிழமை, ஆகஸ்ட் 8, 2012
ஆடி 24, திருவள்ளுவர் ஆண்டு–2043

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2012–ஆம் ஆண்டு மே திங்கள் 31–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 19/2012.**

***2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**1.** (1) இந்தச் சட்டம், 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி (நான்காம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாக குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 32/2006. **2.** 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்திற்கான இரண்டாம் இணைப்புப் பட்டியலில்,– இரண்டாம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

(1) வரிசை எண் 5–க்கு எதிராக உள்ள (ii) எனும் இனத்திற்கும் அதில் (2), (3), (4) ஆகிய கலப்பத்திகள் தொடர்பான பதிவுகளுக்கும் பதிலாக, பின்வரும் இனமும் பதிவுகளும் முறையே அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

| | | |
|---|---|---|
| "(ii) பட்டியலிடப்பட்ட வானூர்திக் தடங்களின் வழியாக இயக்கப்படும் நாற்பதாயிரம் கிலோ கிராமிற்குக் குறைவான பெருமளவு எடையுடன் உயரப்பறந்து செல்லும் வானூர்தி ஒன்றுக்கு விற்பனை செய்யப்பட்ட வானூர்தி விசை எரி பொருள். | இம்மாநிலத்தில் முதலாம் விற்பனை முனையில் | நூற்றுக்கு 5 விழுக்காடு.'' ; |

(2) வரிசை என் 11–க்கு எதிராக, (4)–ஆம் கலப்பத்தியில், ''நூற்றுக்கு 4 விழுக்காடு'' எனும் பதிவிற்குப் பதிலாக, ''நூற்றுக்கு 5 விழுக்காடு'' எனும் பதிவானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) விளக்கம் III-க்குப் பின்பு பின்வரும் விளக்கமானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

விளக்கம் IV.-வரிசை எண் 5–க்கு எதிராக உள்ள (ii) எனும் இனத்தின் நோக்கத்திற்காக ''பட்டியலிடப்பட்ட வானூர்தித் தடங்கள்'' என்றால், பட்டியலிடப்பட்ட வான் வழிப் போக்குவரத்து சேவை எதனையும் இயக்குவதற்கு மைய அரசினால் அனுமதி வழங்கப்பட்டுள்ள வானூர்தித் தடங்கள் எனப் பொருள்படும்.''.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2012–ஆம் ஆண்டு மே திங்கள் 31–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 20/2012.**

**1989–ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கின அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக: —

**1.** (1) இந்தச் சட்டம், 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கின அறிவியல் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக் கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 42/1989. **2.** (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கின அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் 2–ஆம் பிரிவில், (g) எனும் கூறில், ''மற்றும் மீன்வளக் கல்லூரி, தூத்துக்குடி'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும். 2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 10–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், ''மற்றும் மீன்வளம்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும். 10–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**4.** முதன்மைச் சட்டத்தின் 18–ஆம் பிரிவில், (2)–ஆம் உட்பிரிவில்,– 18–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(a) ''வகை I– பதவி வழி உறுப்பினர்கள்'' எனும் தலைப்பின்கீழ், (e), (f), (g) ஆகிய இனங்களுக்கும் அதன் தொடர்பான பதிவுகளுக்கும் பதிலாக, பின்வரும் இனங்களும் பதிவுகளும் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(e) கால்நடை வளர்ப்புத் துறை இயக்குநர்''; மற்றும்

''(f) பதிவாளர்.'';

(b) ''வகை II–பிற உறுப்பினர்கள்'' எனும் தலைப்பின்கீழ், (c) எனும் இனத்தில், ''அல்லது மீன்வளம்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**5.** முதன்மைச் சட்டத்தின் 22–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், ''வகை I–பதவி வழி உறுப்பினர்கள்'' எனும் தலைப்பின் கீழ், ( d ) எனும் இனமானது விட்டுவிடப்படுதல் வேண்டும். 22–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**6.** முதன்மைச் சட்டத்தின் 24–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், ''மீன்வளம்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும். 24–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**7.** முதன்மைச் சட்டத்தின் 29–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவிற்கு பதிலாக, பின்வரும் உட்பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும். 29–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

''(1) இந்தச் சட்டத்தின் மற்றும் நிலைமுறை விதிகளின் வகைமுறைகளுக்கும் உட்பட்டு, இப்பல்கலைக்கழகமானது கால்நடை வளர்ப்பை மேம்படுத்துவதற்கு உதவும் நோக்கத்திற்காக, கால்நடை மருத்துவம், கால்நடை வளர்ப்பு மற்றும் அதனோடு தொடர்புடைய பொருட்பாடுகள் தொடர்பான முக்கியமான பிரச்சினைகளின் பேரில் அடிப்படை ஆராய்ச்சியை மேற்கொள்வதற்காக கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கின அறிவியல் ஆராய்ச்சிக் கழகம் ஒன்றை நிறுவுதல் வேண்டும்; மற்றும் இப்பல்கலைக்கழகமானது இந்நோக்கத்திற்காக, அரசின் கட்டுப்பாட்டிலுள்ள கால்நடை வளர்ப்புத்துறையுடனும் ஆராய்ச்சி நிலையங்களுடனும் இணைந்து ஒத்துழைத்து தேவைப்படக்கூடிய அத்தகைய எண்ணிக்கை அளவிலான பல கால்நடை மருத்துவம் மற்றும் பழக்கு விலங்கின ஆராய்ச்சி நிலையங்களை நிறுவுதல் வேண்டும்.''.

**8.** முதன்மைச் சட்டத்தின், 30–ஆம் பிரிவில்,– 30–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**(1).** **(1)–**ஆம் உட்பிரிவில், '' பழக்கு விலங்கினங்களை வைத்திருக்கும் குடியானவர்கள், மீன் பண்ணையாளர்கள் மற்றும் மீனவர்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''மற்றும் பழக்கு விலங்கினங்களை வைத்திருக்கும் குடியானவர்கள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

**(2).** **(2)–**ஆம் உட்பிரிவில், (a) எனும் கூறில், '' பழக்கு விலங்கினங்களை வைத்திருக்கும் குடியானவர்கள், மீன் பண்ணையாளர்கள் மற்றும் மீனவர்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''மற்றும் பழக்கு விலங்கினங்களை வைத்திருக்கும் குடியானவர்கள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

41–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**9.** முதன்மைச் சட்டத்தின் 41–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், (a) எனும் கூறில், ''மற்றும் மீன் வளக்கல்லூரி, தூத்துக்குடி'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

43–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**10.** முதன்மைச் சட்டத்தின் 43–ஆம் பிரிவில், (1–A) எனும் உட்பிரிவில், ''மற்றும் மீன்வளம்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.